# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

## PRESS RELEASE

## CONDUCTING OPEN HOUSE SESSION EVERYMONTH IN ALL THE DISTRICT OFFICES, ZONAL OFFICES AND HEAD OFFICE OF TNPCB

Issue of consent and monitoring of industries and redressal of pollution related complaints are some of the important functions of the Board. Most of these functions have been made online in the recent years and the same has resulted in minimal personal interaction between the Board and the other stakeholders including the public. Although the sophisticated online application of the Board keeps the stakeholders updated with the status of their application/petition, it is felt that more understanding, trust and confidence can be built only through personal interaction.

Hence, in order to facilitate personal interactions with industries, general public, NGOs, etc and to carry out the functions of the Board in a more transparent and credible way, TNPCB has proposed to conduct "OPEN HOUSE SESSION" (OHS) to which any person / industrial unit / NGO / representatives of public welfare associations can participate and meet the concerned TNPCB officials to express their grievance / to get clarifications / to make complaint on pollution related issues, consents and to make suggestions / views in respect of environment protection.

The OHS will be held on 5th of every month at 11.00 am at all District offices, at all Zonal offices and at Head office of the Board. If 5th happens to be a holiday, the OHS will be held on the next working day.

Any person can participate in OHS in any office of the TNPCB for the above said purpose without prior information / appointment also. However, it is strongly suggested that those who wish to attend OHS can register themselves prior to their visit in the online web application developed for this purpose by TNPCB so as to enable the officials to reply the participants on the day of OHS itself or even prior to it if possible. The link "OPEN HOUSE" is provided in the TNPCB website **www.tnpcb.gov.in** for registration. Participants are requested to bring "Aadhaar Card" during their visit without fail.

The first OHS will be held on 05.04.2022 at all the offices of the TNPCB and the link for registration will be available from 30.03.2022.

29/03/2022

for Tamil Nadu Pollution Control Board

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Telephone : 22353134 to 141, Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : www.tnpcb.gov.in

**TAMIL NADU POLLUTION CONTROL BOARD**

செய்தி வெளியீடு

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனைத்து மாவட்ட அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் ஒவ்வொரு மாதமும் நேரடி கலந்தாய்வு அமர்வுகளை நடத்துதல்**

தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குதல் மற்றும் அவற்றை கண்காணித்தல் மற்றும் மாசு தொடர்பான புகார்களை நிவர்த்தி செய்தல் ஆகியவை வாரியத்தின் சில முக்கியமான செயல்பாடுகளாகும். இந்த செயல்பாடுகளில் பெரும்பாலானவை கடந்த சில ஆண்டுகளில் இணையவழி மூலமாக செயல்படுத்தப்படுவதால் பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோருடன் நேரடி கலந்துரையாடல் மிகவும் குறைந்துள்ளது. வாரியத்தின் அதிநவீன இணையவழி வசதிகள் விண்ணப்பம்/மனுவின் நிலையை அவ்வப்போது தெரிவித்தாலும், நேரடி கலந்துரையாடல் மூலம் மட்டுமே பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோருடன் புரிதல் மற்றும் அதிக நம்பிக்கையை உருவாக்க முடியும்.

எனவே, தொழிற்சாலைகள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றுடன் நேரடி கலந்துரையாடல்களை எளிதாக்குவதற்கும், வாரியத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படையான மற்றும் நம்பகமான முறையில் செயல்படுத்துவதற்கும், வாரியம் "**நேரடி கலந்தாய்வு அமர்வு**" (OPEN HOUSE SESSION) நடத்த முன்வந்துள்ளது. தனிநபர் / தொழிற்சாலைகள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் / பொது நலச் சங்கங்களின் பிரதிநிதிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க / சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள / மாசு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் இசைவாணைகள் குறித்து புகார் செய்ய மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனைகள் / கருத்துகளை தெரிவிக்க இந்த அமர்வில் பங்கேற்று சம்பந்தப்பட்ட வாரிய அதிகாரிகளை சந்திக்கலாம்.

நேரடி கலந்தாய்வு அமர்வு ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி காலை 11 மணியளவில் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும், அனைத்து மண்டல அலுவலகங்களிலும் மற்றும் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலும் நடைபெறும். 5 ஆம் தேதி விடுமுறையாக இருப்பின், அடுத்த வேலை நாளில் நடைபெறும்.

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Telephone : 22353134 to 141, Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : www.tnpcb.gov.in

மேலே கூறப்பட்ட நோக்கத்திற்காக வாரியத்தின் எந்த அலுவலகத்திலும் எந்தவொரு நபரும் முன் தகவல் / அனுமதியும் இல்லாமல் நேரடி கலந்தாய்வு அமர்வில் பங்கேற்கலாம், இருப்பினும், நேரடி கலந்துரையாடலில் கலந்துகொள்ள விரும்புவோர், தங்கள் வருகைக்கு முன்னதாகவே இதற்காக வாரியத்தால் உருவாக்கப்பட்டுள்ள இணையவழி செயலியில் பதிவு செய்து கொள்ளலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இதன் மூலம் வாரிய அதிகாரிகள் பங்கேற்பாளர்களுக்கு நேரடி கலந்துரையாடல் நாளில் அல்லது முடிந்தால் அதற்கு முன்னதாகவும் பதிலளிக்க இயலும். இதற்காக வாரிய இணையதளமான **www.tnpcb.gov.in** இல் "OPEN HOUSE" என்ற இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பங்கேற்பாளர்கள் தங்கள் வருகையின் போது "ஆதார் அட்டையை" தவறாமல் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் .

முதல் நேரடி கலந்தாய்வு அமர்வு 05.04.2022 அன்று வாரியத்தின் அனைத்து அலுவலகங்களிலும் நடைபெறும் மற்றும் பதிவு செய்வதற்கான இணைப்பு 30.03.2022 முதல் வழங்கப்படும்.

29/03/2022

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்**